International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385 (Print)
Volume 3, Issue 2, April– June 2016 ISSN 2394-6393 (Online)

# அகப்பாடலில் காணப்படும் இசைக்கருவிகளும் இசைத்திறன்களும்

வெ.வீரமணி
*முனைவர்பட்ட ஆய்வாளர், நிகழ்கலைத் துறை, புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605 014*
*gazhalveera82@gmail.com*

**முன்னுரை-** பறவைகளின் ஒலி, வன விலங்குகளின் ஒலி, முதலியவற்றைக் கேட்ட புராதன மனிதன் இவ்வொலிகளை வெளிப்படுத்தும் வகையில் இசைக் கருவிகளைச் செய்து கொண்டான். அருவி ஒலி, இடியோசை, மேகத்தின் முழக்கம், இவற்றினைக் கேட்ட புராதன மனிதன், இசைக் கருவிகளை செய்து கொண்டான். பளியர் இன மக்கள் குழல் கருவிகளை இசைக்கும் போது, வைகறையில் பறவைகள் எழுப்பும் தழிழ்நாட்டில் எண்ணற்ற இசைக்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டது.

அகப்பாடல் எனப்படுவது 1.நற்றிணை, 2.குறுந் தொகை, 3.ஐங்குறுநூறு, 4.கலித்தொகை, 5. அகநானூறு, 6. நெடுநெல்வாடை, 7. முல்லைப்பாட்டு, 8. பட்டினப்பாலை ஆகியவையாகும்.

| எண். | தமிழ் | வடமொழி | கோவை |
|---|---|---|---|
| 1. | பண் (பொருள்) | சம்பூர்ணம் | 7 ஸ்வரம் |
| 2. | பண்ணியல் | சாடவம் | 6 ஸ்வரம் |
| 3. | திறம் | ஔடவம் | 5 ஸ்வரம் |
| 4. | திறந்திறம் | சதுர்த்தம் | 4 ஸ்வரம் |

## அகப்பாடலில் காணப்படும் இசைத் திறன்கள்

ஒருவன் உவந்தவை காட்டுதல் 122 - 133 கலித்தொகை பாடல்கள கண்டார்க்குத தாக்கு அணங் கு,இக்காரிகை காண்மின், பண்டாரம், காமன் படை, உவன் காண், காண்மின், நீல் நெய் தாழ் கோதையவர் விலக நில்லாது, பூ ஊது வண்னம் யாழ் கொண்ட கொலை கேண்மின் கிளைக்கு உள்ள உணவுக் கரும்பின் கேழ் கெழு பாலை இசை ஓர்மின் பண் கண்டு திறன் எய்தாப் பண் தாளம் பெறப் பாடி கொண்ட இன் இசைத் தாளம் கொளை சீர்க்கும் விரித்து ஆடும்.

தண் தும்பியினம் காண்மின், தான் வீழ் பூ நெரித்தாளை முனை கெழுநினை நெஞ்சின் முன் பிறிந்து, பின்னும். களை வரல் ஒரு நும்பி காய் சினத்து இயல் காண்மின். என ஆங்கு

## உரை விளக்கம்

மலையில் உள்ள தேனை வண்ண இசை எழுப்பும் வண்டுகளின் யாழினை ஒத்த இனிய பாட்டினை கேளுங்கள், வண்ணனது பாடர் பண்ணீர்க்குளிய பொருளிந்து பாடப்பட்டிருக்க, குரல் கொண்ட கிளையாகிய இனிக்கு உறவாகப் பொருந்தின உழை குரலான நிறம் பொருந்திய வண்டினது அருப்பாலையில் தோன்றிய மருதப்பண்ணாகி யஇசையைக் கேளுங்கள். விளர்ப்பாளையில் தோன்றும் யாம யாழினை தாளத்துடன் சீருக்கும் அப்பண்ணினது சீருக்கும ஏற்றவாறு தமது அழகிய சிறகுகளை ஆடுகின் ற குளிர்ந்தஇசையினால் பாடும் தும்பிகளின் கூட்டத்தைக் காணுங்கள். பாடும் வண்டின் பாடல் இசைவகை யாழு டன் முதலாவதாகிய குரல கொண்ட கிளையாகிய இனிக்குக் கிளையாகப் பொருந்திய உழை குரலான அரும்பாளையில் தோன்றி மருதப்பண்ணாகிய இசையைக்கே ளுங்கள் என்று கூறப்படுகிறது.

| எண். | தமிழ் | வடமொழி | சுரக்குறிப்பு |
|---|---|---|---|
| 1. | குரல் | சட்ஜம் | ச |
| 2. | துத்தம் | ரிஷபம் | ரி |
| 3. | கைக்கிளை | காந்தாரம் | க |
| 4. | உழை | மத்தியமம் | ம |
| 5. | இளி | பஞ்சமம் | ப |
| 6. | விளரி | தைவதம் | த |
| 7. | தாரம் | நிஷாதம் | நி |

## இசை வகை ஏழு வகைப்படும்

வடமொழியில் சப்தஸ்வரங்கள் என்றும், தமிழில் ஏழ் கோவை என்று கூறுவர். அடுத்து, பண் கண்டு திறன் எய்தார் பண் தாளம் பெறப் பாடி இன் இசைத் தாளம் கொளை சீர்க்கும் விரித்து ஆடும் தன் தும்பியினம் என்றார்.

**ஔடவம் ராகம் எ.கா:**

இந்தோளம் - ஆ - ச க ம த நி ஸ
அ - ச நி த ம க ஸ

**ஸம்பூர்ணம் எ.கா:**

ஆ - ச ரி க ம ப த நி ஸ
அ - ஸ நி த ப ம க ரி ச

சங்கராபரணம் இராகம் ஸம்பூர்ண ராகம் ஆகும்.

**சரஸ்வதி ராகம் எ.கா.**

ஆ - ச ரி ம ப த ஸ
அ - ஸ நி த ப ம ரி ச

கலித்தொகையில் தோழியின் கூற்று:- அதிர் இசைக் கருவிதன் அம் சினை மிசை வீழ, முதிர் இணர் ஊழ் கொண்ட முழுவுத்தாள் எரி வேங்கை, அதிர்ந்த ஓசையுடன் இருமலைகளினின்றும் அருவி விழ ாநின்றது. அழகிய கிளைகளின் மேலே அருவிநீர் வீழ்தலின் முதிர்ந்த கொத்துக் கொண்ட முழவுபோலும் தளரினை உடைய வேங்கை யிடத்தே நெருப்பு போலும் மலர்க ள்மலர்ந்துள்ளன.

### கலித்தொகையில் சான்றோர் கூற்று

ஏமம் என்று இறங்கும், நின் எறி முரசும், அம்முரசின் எமத்து இகழ்ந்தோளை இவள். நின்னுடைய முழங்குகின்ற முரசம் இவ்வுலகத்திற்கு காவல் என்று கூறப்படுகிறது. அந்த முரசினது காவலினின்று இவள் நீங்கிளவள் அல்லள்.

### இசைக்குறிப்புகள்

இசையுடன் தொடர்புடைய செய்திகள் பல காணப் படுகின்றன. இச்செய்திகளை (1) இசைக்கருவிகளின் வகைகள், (2) இசையுடன் தொடர்புடைய சொற்கள், (3) இசை வல்லுனர்கள் பற்றிய குறிப்புகள் போன்ற உட்பிரிவு களுடன் இவ்வியல் விளக்க முற்படுகிறது. இசைக் கருவிகள் என்று நோக்கும்போது தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் முதலியவையாகும்.

### இசைக்கருவிகளின் வகைகள்

1. தோற் கருவிகள்
2. துளைக் கருவிகள்
3. நரம்புக் கருவிகள்
4. உலோகக் கருவிகள்

இந்திய இசையில் தோல் கருவிகள் ‘அவநத்த” வாத்தியங்கள் எனப்படுகின்றன. அவநத்தம் என்றால் மூடப்படுவது என்று பொருளாகும். ஒரு பாத்திரமோ மரத்தாலான கூடோ தோலினால் போர்த்தப்பட்டால் அது அவநத்தம் அகிறது.

### தோற்கருவிகளின் வகைகள்

1.முழவு, 2. பேரிகை, 3. கண்டை, 4. திமிலை, 5. துடி, 6. சல்லரி, 7. முரசு, 8. துந்துபி, 9. உடுக்கை, 10. மமருகம், 11.படகம், 12. தண்ணுமை, 13. சஞ்சரி, 14.தக்கை, 15. தகுநிதம், 16. மத்தளம், 17. கரடிகை,18. குடமுழா, 19. கல்லலகு, 20. கல்லவடம், 21. தடாரி, 22. கொடுகொட்டி, 23. இடக்கை, 24. கத்திரிகை, 25. பறை, 26. பிடவம், 27. மொந்தை, 28. முரவம், 29. துந்துமி, 30. சகடை, 31. பம்பை.

நரம்புக் கருவிகள்: 1. யாழ், 2. ருத்ரவீணை, 3. வீணை, 4. சாரங்கி, 5. சித்தார்.

காற்றுக் கருவிகள்: புல்லாங்குழல்.

### முடிவுரை

சங்க இலக்கியங்களில் இசை பற்றிய செய்திகளும், இசைக் கல்வெட்டுகளும் இசைத் தூண்களும், இசை பற்றிய செய்திகளும் பல கோவில்களிலும், இதிகாசங் களிலும், புராணங்களிலும் நாம் இன்றும் காண்கிறோம். அகப்பாடலில் இசை பற்றிய செய்திகள் எண்ணற்றவை நாம் காண்கிறோம். ஆனால் தற்போது ஒரு சில இசைக்கருவிகள் அழிந்து போய்விட்டன. ஒரு சில இசைக்கவிகள் மட்டுமே ஸ்ருதி தாளம் அமைக்கப்பட்டு இசை கச்சேரிகளிலும், திரைப்படங்களிலும் நாம் பயன்படுத்தி வருகிறோம்.

மேலும் மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு கல்லூரிகள், இசை பல்கலைக்கழகங்கள், நாட்டியம், ஓவியம் , நாடகம் என்று தனி ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும். அனைத்து பள்ளிகளிலும் இசை, நாட்டியம், ஓவியம், நாடகம் போன்ற ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டும். மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையும் ஊ.ஊ.சு.வு என்று கூறப்படுகின்ற நிறுவனமும் மாநில அரசுடன் இணைந்து கலைகள் அழியாமல் இருக்க பாடுபடவேண்டும்.

### துணை நின்ற நூல்கள்

[1] செல்லதுரை பி.டி. (ஆ.), தென்னக இசையியல், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்-14, 2010.
[2] விசுவநாதன் அ., (உ.ஆ.), கலித்தொகை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
[3] மனோன்மணி சண்முகதாஸ் (ஆ.), குறுந்தொகை ஒரு நுண்ணாய்வு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-17, 2000.
[4] ஆலிஸ் (உ.ஆ.), பதிற்றுப்பத்து மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
[5] ஞானாகுலேந்திரன், பழந்தமிழரா் ஆடலில் இசை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூா், 1990.

குறிப்பு – கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி துணைநின்ற நூல் பட்டியலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதாவது, ஆசிரியா் பெயா்., நூல் பெயா், பதிப்பகம் பெயா், இடம், ஆண்டு.

உதாரணம்: சண்முகம்,செ.வை., மொழி வளா்ச்சியும் மொழி உணா்வும், மணிவாசகா் பதிப்பகம், சென்னை,1989.